அவர்கள் தங்குவதற்கான வாய்ப்பு அளிப்பதற்காக அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரம் தரப்படும்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் தமிழகத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 88— திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்திடமிருந்து ஒரு புது ஆராய்ச்சி நிலையம் தமிழகத்தில் அமைப்பதற்கான திட்டம் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) அதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் இடங்கள் பார்த்து பரிசீலிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) தேசிய வேளாண்மை ஆராய்ச்சி திட்டத்தின்கீழ் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் குமரிமாவட்டத்தில் ஒரு புதிய பல்பயிர் ஆராய்ச்சி நிலையம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 7—10—1980 அன்று தடிக்காரன்கோணம் என்ற கிராமத்திற்கு அருகில் ஓர் இடத்தை பார்வையிட்டு அந்த இடத்தில் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு பரிந்துரை செய்துள்ளது. இந்த இடம் வனத் துறைக்குட்பட்டது. இந்த இடத்தைக் கொடுக்க இயலாது என்று வனத்துறை தெரிவித்துள்ளதால், மாற்று இடமொன்றை பெறும் முயற்சியில் பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த தாடிக்காரன்கோணம் என்ற இடத்தை ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பார்த்ததற்குப் பிறகு இந்த ட்ராபிகல் கன்ட்ரிசிலே உற்பத்தி செய்யும் பொருள்கள், அதாவது விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கு தகுந்த இடம் என்று சொல்லப்பட்டதனாலே இந்த இடம் வன இலாகாவுக்குச் சொந்தமா அல்லது தனியாருக்குச் சொந்த மானதா என்பது பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு இடையே வழக்கு நடந்து வருகிறது. ஆகவே அதை வனம் என்று

சொல்வதற்கு இல்லை. மற்ற இடங்கள் மாதிரித்தான் அந்த இடமும் இருக்கிறது. ஆகவே வன இலாகா மத்திய அரசை அணுகி அந்த இடத்தை இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு கொடுக்குமே யானால் அது மிகச் சிறப்பாக இருக்கும் என்ற காரணத்தால் வேளாண்மைத்துறைக்கு அந்த இடத்தை அரசு வாங்கிக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : வனத்துறை சம்பந்தப் படாத காரணங்களுக்காக வனத்துறை இடத்தைக் கொடுக்க இயலாது என்று அவர்கள் கொள்கை முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே மாற்று இடத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக் கிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இது வருவதன் காரணத்தாலும், இன்று மத்திய அரசுக்கு அதிகமான அளவிற்கு அன்னியச் செலாவணி சம்பாதித்துக் கொடுக்கிற ரப்பர் மரங்கள் அந்த மாவட்டத்தில்தான் தமிழகத்தில் இருக்கிறது என்பதாலும் இன்று ரப்பர் மரங்களுக்கு அதிகமான நோய் ஏற்பட்டு பெரிய அளவிற்கு கெடுதல் ஏற்பட்டுக்கொண்டிருப்பதால் இதை பிரத்தியேக விஷயம் என்ற முறையில் மத்திய அரசு பரிசீலித்து வனத்துறை இடங்களைக் கொடுக்கமுடியாது என்ற வரம்பு கிடையாது—மத்திய அரசின் அனுமதியோடு கொடுக்கப்படலாம் என்ற ஒரு நிலை மத்திய அரசால் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதால் மத்திய அரசை அணுகி அந்த ஆராய்ச்சி நிலையத்தினை வாங்கிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மத்திய அரசை அணுகி அங்கிருந்து அனுமதி பெற்று இந்த ஆராய்ச்சி நிலையத்தினை அமைப்பதற்கு காத்திருப்பதைவிட வேறு இடம் தேடுவது நல்லது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்த ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிப்பதற்கு உண்டான இடம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இல்லை என்றால் வேறு மாவட்டத்தில் இடம் தேடி அதைக் கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அந்த ஆராய்ச்சி நிலையத்தில் எத்தகைய ஆராய்ச்சி செய்ய இருக்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இது ஒரு பல்பயிர் ஆராய்ச்சி நிலையம். ஆனால், குமரி மாவட்டத்தினுடைய தட்பவெட்ப நிலைகள், சூழ்நிலைகளையொட்டித்தான் இந்த ஆராய்ச்சி நிலையம் அமைய இருக்கிறது. வேறு மாவட்டத்திற்கு இதைக் கொண்டுவர இயலாது.

திரு. டி. மணி: இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து ஒரு புது ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக சில ஏற்பாடுகளை செய்கிற நேரத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குழித்துறை வந்தபோது அங்கு இன்னொரு இடத்தைக் குறிப்பிட்டு, புயூலிர் குறிச்சி கோட்டை அங்கு போதுமான இடம் இருக்கிறது என்றும் அப்பகுதியில் நல்ல தண்ணீர், மண் இருக்கின்றன என்றும் கூறி இருக்கிறோம். நாம் கேட்கிற பள்ளக்குளம் கிடைக்கவில்லை என்றால் இந்தப் பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்கே இந்த ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பரிசீலிக்கும்.

ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அதிக மகசூல் தரும் நெல், கரும்பு ரகங்கள்.

* வினா எண் 89— திரு. இல. பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய ஆராய்ச்சி மூலம் 1979–1980, 1980–1981, 1981–1982-ம் ஆண்டில் அதிக மகசூல் தரும் சத்துள்ள நெல், கரும்பு கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த மாவட்டங்கள் இதனால் பயனடைந்துள்ளன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம். 1979-80, 1980-81 மற்றும் 1981–82 ஆகிய ஆண்டுகளில் பத்து புதிய நெல் ரகங்களும், ஒரு கரும்பு ரகமும் கண்டுபிடிக்கப்பட்டன.

(ஆ) புதிய கண்டு பிடிப்பான 10 நெல் ரகங்கள் ஒவ்வொன்றும் சில சில மாவட்டங்களுக்கு ஏற்றவையாக அமைந்துள்ளன. பொதுவாக இந்த புதிய நெல் ரகங்களால் செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் பயனடையும். இரு ரகங்கள் தமிழகமெங்கும் பயிரிட உகந்தது. புதிய கண்டுபிடிப்பான கரும்பு (கோ. க. 80.1) தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் அதிக பயன் கொடுக்கக்கூடியவை.

திரு. இல. பலராமன்: பத்து புதிய நெல் ரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறினார்கள். அந்த பத்து புதிய ரகங்கள் எவை எவை? அவை மத்திய அரசின் ஆராய்ச்சி நிலையத்தினால் கண்டுபிடிக்கப்பட்டதா? அல்லது மாநில அரசின் ஆராய்ச்சி நிலையத்தினல் கண்பிடிக்கப்பட்டதா? கரும்பு எந்த ரகத்தைச் சேர்ந்தது? அது ஏக்கர் ஒன்றுக்கு என்ன விகிதம் இலாபம் தரகூடிய கரும்பாக இருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?